**கவனிக்க.**- 27.06.2025 ஆந் திகதிய 2443 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2444 - 2025 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2025.07.04
2444 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 850 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B 82697- 403 (2025/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற இலங்கை தொழிநுட்பவியலாளர் உத்தியோகத்தர் (III ஆந் தரம் மற்றும் பயிற்சித் தரம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2025 ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

❖ விண்ணப்பம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழுள்ள “Online Applications - Recruitment Exams/E.B.Exams” இனூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2025 ஜூலை மாதம் 07ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2025, ஆகத்து மாதம் 07ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

❖ ஏற்கனவே, அரச / மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதி யொன்றை தமது பிரத்தியேகக் கோவையினுள் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை நிரூபிப்பதற்கான கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.0. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தகைமைகள் அனைத்தையும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.1. **பொதுவான தகைமைகள் :**

1.1.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
1.1.2. சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
1.1.3. ஏதேனும் ஒரு சமய/சமயப் பிரிவின் துறவிப் பதவியை வகிக்கும் எந்தவொரு நபரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்கள்.
1.1.4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் V ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறான தகுதியற்றவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

1.2. **உடல், உள தகைமை :**

விண்ணப்பதாரிகள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவிலான உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

1.3. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.4. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

1.4.1. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் III ஆந் தரம்

1.4.1.1 **கல்வித் தகைமைகள் :**

- தூய கணிதம்/ பிரயோகக் கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியலுடன் கூடிய விஞ்ஞானம் / கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த பாடங்கள் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

- சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சா.தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

1.4.1.2 **தொழிற் தகைமைகள் :**

மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும்.

- மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாட்லி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா

அல்லது

- கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

- தொழிற்துறைக்கு உரித்தான தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 06 ஆம் மட்டத்துடைய தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

- கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கிய நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

1.4.2. **பயிற்சித் தரம் ( ஒரு வருடகாலப் பயிற்சி)**

1.4.2.1. **கல்வித் தகைமைகள் :**

- தூய கணிதம்/ பிரயோகக் கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியலுடன் கூடிய விஞ்ஞானம் / கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த (03) பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

- சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சா.தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

1.4.2.2. **தொழிற் தகைமைகள் :**

மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும்.

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் பதவியுடன் தொடர்புடைய துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல். (உதா:தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் / மின் / இயந்திரம்)

அல்லது

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் திட்டமிடல் கலையுடன் தொடர்பான ஒரு வருட முழு நேர கால பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய ஒரு துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான சான்றிதழ் பத்திர பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கிய நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

2.0. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இற்கு மற்றும் பயிற்சி தரத்திற்கான திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது, தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு போதுமான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாதபோது, பயிற்சி தரத்திற்குரிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மீதமுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

2.2. எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்பவும், நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும் என்பதோடு, சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

2.3. **எழுத்துப் பரீட்சை :**

| *பாடங்கள்* | *நேரம்* | *அதிகபட்ச புள்ளி அளவு* | *சித்திக்குரிய புள்ளி அளவு* |
|---|---|---|---|
| நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| தொழில்நுட்பம் சார் வினாப் பத்திரம் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

2.4. **எழுத்துப் பரீட்சைக்கான பாடத் திட்டம்** :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் சிந்தனா ரீதியான பகுப்பாய்வு நிலையை தீர்மானிக்கும் திறன், முடிவுகள் எடுக்கும் திறன்களை மதிப்பிடுவதற்காக கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |
| தொழில்நுட்பம் சார் வினாப் பத்திரம் | கட்டிட நிர்மாணம் பற்றிய கொள்கைகள், கட்டுமானப் பணிகளுக்கான வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை படித்துப் புரிந்துகொள்ளும் திறன், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன், நீர் வழங்கல், வடிகாலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவை பரீட்சார்த்தியிடம் உள்ள பெற்றுக்கொள்ள வேண்டிய திறன்களை மதிப்பிடுவதற்காக இந்த வினாக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |

2.5. மேலே உள்ள ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கான முதன்மைப் பட்டியலொன்று தயாரிக்கப்படும்.

2.6. மேற்படி வினாப் பத்திரத்திற்கு விடையளிப்பதற்காக அவசியப்படும் கேத்திர கணிதவியல் சார்ந்த உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகளை விண்ணப்பதாரியினால் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவரல் வேண்டும்.

2.7. நேர்முகப் பரீட்சைக் குழு, நியமன அதிகாரியால் நியமிக்கப்படுவதோடு, இந்தத் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படாது என்பதுடன், தகைமைகள் மாத்திரம் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

**3.0. பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

3.1. இப்பயிற்சியளிக்கும் தரத்தில் சேர்க்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும். நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்ததாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்படுவார்கள்.

3.2. பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்வதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலம் தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

4.0. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

4.1.இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இன் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 52,250 - 800 x 10 -1,119 x 11- 1,320 x 10 - 1,350 x 10 - ரூபா 100,040.00 (MN-3-2025) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளும் இப்பதவியை வகிப்பவருக்கு உரித்துடையதாகும்.

4.2. பயிற்சித் தரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சிக் காலத்தினுள் பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025இன் அட்டவணை VI இன் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவும் செலுத்தப்படும்.

5.0. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

5.1. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் மற்றும் அவ்வப்போது மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

5.2. அத்தோடு, தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் விருப்பத்தின் பேரில் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்படுவார்கள். அதேபோன்று, அவர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் கட்டுப்பட்டுள்ளார்கள்.

5.3. இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆந் தரத்துடைய பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதாகும். (ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்). மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

5.4. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கான நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, நியமனதாரி, 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இலக்கம் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். அப்பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

5.5 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஆந் தரத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால், உள்நாட்டலுவல்கள் விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்/மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளரின் கீழுள்ள எல்லா புதிய கட்டுமானப் பணிகள், மேம்படுத்தல்கள் மற்றும் பழுதுபார்ப்புக்களுக்கான வேலைகளைப் பரீட்சித்தல் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு உரித்தான திட்ட வடிவமைப்பினை மேற்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களைப் பரீட்சித்து பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள பதவிக்கு உரித்தான பிற கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

6.0. **விண்ணப்பிக்கும் முறை :**

6.1. இணையவழி (Online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென்பிரதி மற்றும் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக/ பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E- Mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (Instructions) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிப்படும்.

6.2. விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III தரத்திற்கும், பயிற்சியளிக்கும் தரத்திற்கும் என்பதை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் (✓) என்ற அடையாளத்தின் மூலம் தெளிவாக அடையாளமிடுவது கட்டாயமானதாகும்.

6.3. விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சை தினத்தில் மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6.4. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் / அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம் / விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ் செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும். தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

6.5. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல், பரீட்சைக்கு தோற்றுவதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

6.6. அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

6.7. சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

7.0. **பரீட்சைக் கட்டணம் :**

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/- ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுவதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

II. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

III. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :-

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அல்லது அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண செலுத்துகை முறை மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

8.0. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

8.1. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்பத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

9.0. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

9.1. எவரேனும் ஒரு பரீட்சார்திக்கு தேவையான தகைமைகள் இல்லையென எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

10.0. **பொதுவான விடயங்கள் :**

10.1. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

10.2. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்,உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் முடிவெடுக்கப்படும்.

10.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலம சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 05
2025 யூன் 24.

7-585/1

---

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழிநுட்பவியலாளர் உத்தியோகத்தர்(IIIஆந் தரம் மற்றும் பயிற்சித் தரம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2025

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2025, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

- ❖ விண்ணப்பம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" என்பதன் கீழுள்ள "Online Applications – Recruitment Exams/E.B.Exams"யினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2025, யூலை மாதம் 07ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2025, ஓகத்து மாதம் 07ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

- ❖ உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றை தமது பிரத்தியேகக் கோவையினுள் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை உறுதிப்படுத்திய கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.0. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகளால் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் அனைத்தையும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.1. **பொதுவான தகைமைகள் :**

1.1.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. ஏதேனும் ஒரு சமய/சமய பிரிவின் துறவிப் பதவியை வகிக்கும் எந்தவொரு நபரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்கள்.

1.1.4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் Vஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறான தகுதியற்றவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

1.2. **உடல் மற்றும் உளரீதியான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல்,உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.3. **வயதெல்லை :**

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள் அசேவையில் பணியாற்றுபவர்கள் என்பதால் வயதெல்லை ஏற்புடையதற்றது.

1.4. **கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் :**

1.4.1. **இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் III ஆந் தரம்**

1.4.1.1. **கல்வித் தகைமைகள் :**

- சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

1.4.1.2. **தொழிற் தகைமைகள் :**

மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும்.

- மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாட் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்ளோமா,

அல்லது

- கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் Iஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

- தொழிற்துறைக்கு உரித்தான தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 06ஆம் மட்டத்துடைய தகைமையை பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

- கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கிய நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

1.4.1.3. **அனுபவம் :**

- அரசின் அமைச்சு / திணைக்களம் / மாவட்ட செயலகம் / பிரதேச செயலகத்திற்குரிய ஆரம்ப நிலை மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியில் நிரந்தரம் செய்யப்பட்டு, திணைக்கள ரீதியான பதவியொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

1.4.2. **பயிற்சித் தரம் (ஒரு வருட காலப் பயிற்சி) :**

1.4.2.1. **கல்வித் தகைமைகள்** :

- சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த.(சா.தர) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

1.4.2.2. **தொழிற் தகைமைகள் :**

மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும்.

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் பதவியுடன் தொடர்புடைய துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல். (உதா: தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில் / மின் / இயந்திரம் )

அல்லது

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் படவரைஞர் தொடர்பான ஒரு வருட முழு நேர கால பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய ஒரு துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியளார்களுக்கான சான்றிதழ் பத்திர பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

- கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கிய நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர்,மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில் நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

1.4.2.3. **அனுபவம் :**

- அரசின் அமைச்சு / திணைக்களம் / மாவட்ட செயலகம் / பிரதேச செயலகத்திற்குரிய ஆரம்ப நிலை மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியில் நிரந்தரம் செய்யப்பட்டு, திணைக்கள ரீதியான பதவியொன்றில் குறித்த துறையில் குறைந்த பட்சம் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.0. **ஆட்சேர்ப்பு முறை** :

2.1. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இற்கு மற்றும் பயிற்சி தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது, தரம் III இற்கு முதலில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு போதுமான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாதபோது, பயிற்சியளிக்கும் தரத்திற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மீதமுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

2.2. எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்பவும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும் என்பதோடு, சகல வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்கப்படுதல் வேண்டும்.

2.3. **எழுத்துப் பரீட்சை :**

| *பாடங்கள்* | *நேரம்* | *அதிகபட்ச புள்ளி அளவு* | *சித்திக்குரிய புள்ளி அளவு* |
|---|---|---|---|
| நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| தொழில்நுட்பம் சார் வினாத் தாள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

2.4. **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் அவரின் சிந்தனா ரீதியான பகுப்பாய்வு நிலையை தீர்மானிக்கும் திறன், முடிவுகள் எடுக்கும் திறன்களை மதிப்பிடுவதற்காக கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |
| தொழில்நுட்பம் சார் வினாத் தாள் | கட்டிட நிர்மாணம் பற்றிய கோட்பாடுகள், கட்டுமானப் பணி களுக்கான வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை படித்துப் புரிந்துகொள்ளும் திறன், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன், நீர் வழங்கல், வடிகாலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவை பரீட்சார்த்தியிடம் காணப்படுகின்ற பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய திறன்களை மதிப்பிடுவதற்காக இந்த வினாக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. |

2.5. மேலே உள்ள ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கான முதன்மைப் பட்டியலொன்று தயாரிக்கப்படும்.

2.6. மேற்படி வினாப் பத்திரத்திற்கு விடையளிப்பதற்காக அவசியப்படும் கேத்திர கணிதவியல் சார்ந்த உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகளை விண்ணப்பதாரியினால் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவருதல் வேண்டும்.

2.7. நேர்முகப் பரீட்சைக் குழு, நியமன அதிகாரியால் நியமிக்கப்படுவதோடு, இந்தத் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படாது என்பதுடன், தகைமைகள் மாத்திரம் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

3.0 பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

3.1. இப்பயிற்சியளிக்கும் தரத்தில் சேர்க்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியெய்தியதாக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்படுவார்கள்.

3.2. பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்வதற்குத் தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலம் தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அவர்களின் முன்னைய பதவிகளுக்கு விடுவிக்கப்படுவார்கள்.

4.0. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

4.1. இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இன் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 52,250.00 - 800 x 10 -1,119 x 11-1,320x10-1,350x10-ரூபா 100,040.00 (MN-3-2025) ஆகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் இப்பதவியை வகிப்பவருக்கு உரித்துடையதாகும்.

4.2. பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், பயிற்சித் தரத்தில் தாம் முன்னர் வகித்த சம்பள அளவுத்திட்டத்தில் தொடர்ந்தும் அமர்த்தப்படுதல் வேண்டும் என்பதோடு, பயிற்சிப் பாடநெறியின் இறுதியில் அமைச்சின் செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்படுகின்ற ஒரு நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையும் வரை இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராக ஆட்சேர்ப்புச் செய்யும் தரத்தில் ஆரம்ப சம்பள ஏற்றத்திற்குச் சமனான வருடாந்த கொடுப்பனவை சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படும்.

**5.0. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

5.1 தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் மற்றும் அவற்றிற்கு அவ்வப்போது மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

5.2. அத்தோடு,தேர்ந்தெடுக்கப்படும் விண்ணபதாரிகள் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின விருப்பத்தின் பேரில் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்படுவார்கள். அதேபோன்று, அவர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் கட்டுப்பட்டுள்ளார்கள்.

5.3 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆந் தரத்துடைய பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதாகும்.

(ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்). மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

5.4 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கான நியமனம் ஒரு வருடம் பதிற் கடமையாற்றும் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, நியமனதாரி, 2020.10.16 ஆந் திகதிய மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இலக்கம் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். அப்பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன்னர் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

5.5 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III ஆந் தரத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால், உள்நாட்டலுவல்கள் விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் / மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளரின் கீழுள்ள எல்லா புதிய கட்டுமானப் பணிகள், மேம்படுத்தல்கள் மற்றும் பழுதுபார்ப்புக்களுக்கான வேலைகளைப் பரீட்சித்தல் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு உரித்தான திட்ட வடிவமைப்பினை மேற்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களைப் பரீட்சித்து பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள பதவிக்கு உரித்தான பிற கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**6.0 விண்ணப்பிக்கும் முறை :**

6.1. இணையவழி (Online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென் பிரதி மற்றும் செல்லுபடியாகும் விண்ணபப்பபடிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக / பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (E- Mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு

விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (Instruction) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிப்படும்.

6.2. விண்ணப்பிக்க எதிர்பார்க்கப்படுவது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III தரத்திற்கும், பயிற்சியளிக்கும் தரத்திற்கும் என்பதை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் (✓) என்ற அடையாளத்தின் மூலம் தெளிவாக அடையாளமிடுவது கட்டாயமானதாகும்.

6.3. விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சை தினத்தில் மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6.4. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், நிவர்த்தியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும்.தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

6.5. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

6.6. அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

6.7. சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம் :**

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுவதல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)
II. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
III. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு :-**

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும்.பரீட்சை கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.மேற்குறிப்பிட்ட கட்டண செலுத்துகை முறை மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

8.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

8.1. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று, ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

9.0. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

9.1. எவரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த் தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

10.0. **பொதுவான விடயங்கள் :**

10.1. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

10.2. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்,உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதி முடிவாகும்

10.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலம் சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 05
2025 யூன் 24.

7-585/2

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

***அட்டவணை - 2025***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | *04.07.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *20.06.2025* |
| | | வெள்ளி | *11.07.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *27.06.2025* |
| | | வெள்ளி | *18.07.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *04.07.2025* |
| | | வெள்ளி | *25.07.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *11.07.2025* |
| **ஓகத்து** | .. | வெள்ளி | *01.08.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *18.07.2025* |
| | | வியாழன் | *07.08.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *25.07.2025* |
| | | வெள்ளி | *15.08.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *01.08.2025* |
| | | வெள்ளி | *22.08.2025* | .. | *நண்பகல் 12* | வியாழன் | *07.08.2025* |
| | | வெள்ளி | *29.08.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *15.08.2025* |
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | *04.09.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *22.08.2025* |
| | | வெள்ளி | *12.09.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *29.08.2025* |
| | | வெள்ளி | *19.09.2025* | .. | *நண்பகல் 12* | வியாழன் | *04.09.2025* |
| | | வெள்ளி | *26.09.2025* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *12.09.2025* |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.